Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 173

திங்கட்கிழமை
18 மே 2026

வைகாசி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## ஊடகவியலாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் காலமானார்

கொழும்பு, மே 18
சிரேஷ்ட ஆங்கில ஊடகவியலாளரும், அரசியல் பத்தி எழுத்தாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் காலமானார். இவர் இலங்கை அரசியல், இனப் பிரச்சினை, புவிசார் அரசியல், சினிமா குறித்து ஆய்வுக் கட்டுரைகளை எழுதி »11

இனவழிப்பில் மாண்டுபோன உறவுகளுக்காக

# முள்ளிவாய்க்காலில் இன்று உணர்வுபூர்வ நினைவேந்தல்

அனைவரையும் அணிதிரளுமாறு அறைகூவல்

**யாழ்ப்பாணம், மே 18**

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது. முள்ளிவாய்க்கால் தந்த துயர வலிகளை மனங்களில் நிறுத்தி, உயிர் பறிக்கப்பட்ட தங்கள் உறவுகளை அஞ்சலிக்க தமிழினம் இன்று முள்ளிவாய்க்காலில் திரளவுள்ளது.** »11

## பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவியை நீக்குவதற்கு சட்டவரைவு

கொழும்பு, மே 18
பாதுகாப்புப் படைகளின் பிரதானி நியமிப்புக்குரிய சட்டத்தை நீக்குவதற்கான சட்டவரைவு அரசாங்க வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவின் பேரில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த சட்ட வரைவு, கடந்த 15ஆம் திகதி »11

## புதிய பயங்கரவாத தடைச்சட்ட தயாரிப்புப் பணிகள் நிறைவு!

கொழும்பு, மே 18
"பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்" தொடர்பான திருத்தப்பட்ட புதிய சட்ட வரைவின் தயாரிப்புப் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன என்று சட்டவரைவை வரைவதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழு தெரிவித்துள்ளது.
இந்த சட்ட வரைவை வரைவதற்கென நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிவிப்பின் »11

## சுவிஸால் வந்த வயோதிபரை குத்திக் கொன்று கொள்ளை!

சண்டிலிப்பாயில் நடந்த கொடூர சம்பவம்

யாழ்ப்பாணம், மே 18
சுவிற்ஸர்லாந்தில் இருந்து யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்தவர் முகமூடிக் கொள்ளைக் கும்பல் ஒன்றால் கொல்லப்பட்டிருந்த நிலையில், அவரது உடலில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் »11



படம் ஐ.சிவசாந்தன்

## நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருவிழா பட்டோலை காளாஞ்சி மாநகர சபையிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 18
நல்லூர் ஆலய சம்பிரதாய முறைப்படி பெருவிழா பட்டோலை அடங்கிய காளாஞ்சி ஆலய கணக்குப்பிள்ளையால் யாழ்ப்பாணம் மாநகர சபையினருக்கு நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.
பட்டோலை வழங்கும் நிகழ்வு வைகாசி மாதத்தில் வரும் ரோகிணி நட்சத்திரம் அன்று இடம்பெறுவது வழமை. நல்லூர்க் கந்தசுவாமி கோவில் »09

## ஆளுநர் பதவியிலிருந்து விலக மேல்மாகாண ஆளுநர் விருப்பம்

கொழும்பு, மே 18
ஆளுநர் பதவியில் இருந்து விலகுவதற்கான விருப்பத்தை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளேன் என்று மேல்மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.
புதிய ஆளுநர் »11

## மட்டக்களப்பு, அம்பாறைக்கு செல்கிறார் ஜனாதிபதி அநுர

கொழும்பு, மே 18
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை மறுதினம் மற்றும் 22ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்குச் செல்லவுள்ளார் என்று அரசாங்கத் தகவல் திணைக் »09

## பட்டப்பகலில் சங்கிலி அறுத்த கொள்ளையர்கள் சிக்கினர்

வடமராட்சியில் பொலிஸார் துரித நடவடிக்கை

வடமராட்சி, மே 18
பட்டப்பகலில் பெண் ஒருவரிடம் தங்கச் சங்கிலியை அறுத்துத் தப்பிச் சென்ற கொள்ளையர்கள் இருவர் சில மணிநேரத்தில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து அறுத்துச் செல்லப்பட்ட ஒரு பவுண் தங்கச் சங்கிலி »09

வலுவிழந்தது காற்றழுத்தம்!

விரிவு
பக்கம்:-02

## வாகன இறக்குமதி வரி அதிகரிப்பு அரசாங்கத்தின் விவேகமான முடிவு

அலி சப்ரி பாராட்டு



கொழும்பு, மே 18
நாட்டின் பலவீனமான அந்நியச் செலாவணி கையிருப்பைப் பாதுகாப்பதற்காக வாகன இறக்குமதி வரிகள் மீது தற்காலிகமாக 50 வீதக் கூடுதல் கட்டணத்தை விதிப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் "விவேகமான மற்றும் சரியான நேரத்திலான நடவடிக்கை" »11

## சிறீதரன் மீதான குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்கு மூவர் கொண்ட குழு!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முடிவு

வவுனியா, மே 18
நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்காக அவரது இணக்கப்பாட்டுடன் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. »11



"படுபாதகம் நடந்து பதினேழு வருசம் போட்டுது. இன்னும் எங்களுக்கு நீதி எட்டாக்கனி தான் கண்டியளோ"

பூச்சந்தி முரளி

மக்கள் [illegible]மிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 17.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4434 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 02 27 73 80 |
| விசேட எழுத்து | T |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 17.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1501 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 10 32 56 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 17.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0460 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 0 2 1 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 17.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2540 |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 19 24 46 79 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 17.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6192 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 5 7 2 9 6 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 17.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2222 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 19 23 60 82 |
| விசேட எழுத்து | X |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 17.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0308 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 22 56 |

# இலங்கையைக் கட்டமைப்பதில் இந்தியாவுக்கு பெரும் ஆர்வம்!

## முன்னாள் துணைத்தூதுவர் பெருமிதம்



**கொழும்பு, மே 18**

**இலங்கையின் மிகமுக்கியான வர்த்தகப் பங்காளியாகவும், பெருமளவான முதலீடுகளை மேற்கொண்ட நாடாகவும் இந்தியா உள்ளது என்று இலங்கைக்கான முன்னாள் இந்தியத் துணைத்தூதுவர் கலாநிதி சத்யஞ்சல் பாண்டே தெரிவித்துள்ளார்.**

பாகிஸ்தான் தூதுவராகப் பதவியுயர்வு பெற்றுச்செல்லும் அவருக்கான பிரியாவிடை நிகழ்வு கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய-இலங்கை நல்லுறவைப் பொறுத்தமட்டில், கடந்த 3 ஆண்டுகள் மிகச்சிறந்த காலப்பகுதியாக அமைந்துள்ளது. இந்தியப் பிரதமரின் இலங்கை வருகை, இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணம், இந்திய-இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் பரஸ்பர பயணங்கள் உள்ளிட்ட சம்பவங்கள் இந்தக் காலப்பகுதியில் பதிவாகின. குறிப்பாக கடந்த மூன்று ஆண்டுகளிலும், அதற்கு முன்னரும் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பும் வலுவான நிலையிலேயே இருந்துள்ளது. இந்தியாவின் 'அயலகத்துக்கு முதலிடம்' கொள்கை வெறும் பெயரளவிலான கொள்கை அல்ல. மாறாக நாம் அந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே செயற்படுகின்றோம். இலங்கையின் பாதுகாப்பு, வளர்ச்சி என்பது இந்தியாவின் பாதுகாப்பு, வளர்ச்சியுடன் இணைந்ததாகவே இருக்கின்றது. இலங்கை நெருக்கடியில் இருந்தால், அது எம்மையும் பாதிக்கும். அதேவேளை இரு நாடுகளுக்கும் இடையிலான சுமார் 25 ஆண்டுகள் பழமையான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்வது பற்றி இரு தரப்பினரும் ஆராயவேண்டும் என்றார். (க-இ)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 17.05.2026 | ஞாயிற்றுக்கிழமை | 0900 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| C | 6 7 2 5 2 2 |

## Super Ball

| திகதி | தினம் |
|---|---|
| 17.05.2026 | ஞாயிற்றுக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 3166 | C | 36 61 64 80 |

## சனிதா

| திகதி | தினம் |
|---|---|
| 17.05.2026 | ஞாயிற்றுக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| F | 41 47 56 59 | 5327 |

## SASIRI

| திகதி | தினம் |
|---|---|
| 17.05.2026 | ஞாயிற்றுக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0996 | 12 17 37 |

## லக்ன ராசி

| திகதி | தினம் |
|---|---|
| 17.05.2026 | ஞாயிற்றுக்கிழமை |

| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 06 20 26 44 | 4878 |

## KAPRUKA

| திகதி | தினம் |
|---|---|
| 17.05.2026 | ஞாயிற்றுக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| V | 26 | 12 38 53 75 | 2342 |

## அத கோடிபதி

| திகதி | தினம் |
|---|---|
| 17.05.2026 | ஞாயிற்றுக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| U | 20 25 30 51 | 2992 |

# காங்கேசன்துறைக் கடலில் அவதானமாகச் செயற்படுக!

கொழும்பு, மே 18

இலங்கைக்கு அண்மித்து நிலைகொண்டிருந்த குறைந்த காற்றமுத்தத் தாழ்வுநிலை வலுவிழந்தாலும், காங்கேசன்துறைக் கடற்பரப்பு தொடர்ந்தும் கொந்தளிப்புடன் இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கைக்கு வடக்காக நிலைகொண்டிருந்த காற்றமுத்தத் தாழ்வுநிலை வலுவிழந்துள்ள போதிலும் சில கடற்பிராந்தியங்கள் கொந்தளிப்புடனேயே காணப்படும். இதன்படி, காங்கேசன்துறை தொடக்கம் புத்தளம், கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். காங்கேசன்துறைக் கடற்பரப்பில் மணிக்கு 50 தொடக்கம் 55 வரையான கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும். எனவே, மீனவர்கள் இந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு செயற்படவேண்டும்-என்றுள்ளது. (ம)

# வலுவிழந்தது காற்றமுத்தம்!

கொழும்பு, மே 18

நாட்டின் வடக்காக நிலைகொண்டிருந்த குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் வலுவிழந்துள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-


நாட்டின் வடக்காக நிலைகொண்டிருந்த குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் வலுவிழந்துள்ளது. இதன்படி மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யக்கூடும். இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடும் என்பதால், பொதுமக்கள் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் - என்றுள்ளது. (ம)

# இந்தியப் பிரதித்தூதுவராக மைத்ரே குல்கர்னி நியமனம்

கொழும்பு, மே 18

இலங்கைக்கான இந்தியாவின் பிரதித்தூதுவராக மைத்ரே குல்கர்னி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இந்தியத் தூதரகத்தின் அபிவிருத்தி ஒத்துழைப்பு ஆலோசகராகப் பணியாற்றிய நிலையில் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். அதேவேளை இதுவரை இந்திய பிரதித்தூதுவராகப் பணியாற்றிய கலாநிதி சத்யஞ்சல் பாண்டே தனது சேவைக்காலத்தை நிறைவு செய்து, பாகிஸ்தானுக்கான தூதுவராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். (க-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### 10 வருடத் திட்டத்தில்

# 500 மில்லியன் டொலர் முதலிடுகின்றது கனடா!

இலங்கையில் அடுத்த 10 வருடங்களுக்குள் 500 மில்லியன் கனேடிய டொலரை முதலீடு செய்வதற்குத் தயார் என்று கனேடிய இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கனேடிய இலங்கை வர்த்தக சம்மேளனம் அதன் பணிகளை ஆரம்பித்து சுமார் 5 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. இந்தநிலையில் மேலதிக பணிகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே, கனேடிய முதலீடு தொடர்பில் கனேடிய இலங்கை வர்த்தக சம்மேளன ஸ்தாபகர் மொஹமட் ஹமீஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

கனடா மற்றும் இலங்கைக்கு இடையிலும், இந்தோ-பசுபிக் பிராந்தியத்திலும் வர்த்தகம், முதலீடு, சுற்றுலா மற்றும் மூலோபாய வர்த்தகக் கூட்டாண்மையை மேம்படுத்துவதற்கான தளமாகவே கனேடிய இலங்கை வர்த்தக சம்மேளனம் நிறுவப்பட்டுள்ளது. இந்த அமைப்பு நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும், வலுவான வணிக ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் பங்களிப்புச் செய்யும். அத்துடன் கனேடிய மற்றும் இலங்கை நிறுவனங்களுக்கு ஆக்கபூர்வமான வாய்ப்புகளை உருவாக்குவதற்காக வர்த்தகத்துறைத் தலைவர்கள், இராஜதந்திரக் கட்டமைப்புகள், அரச நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் தொழிற்றுறை பங்குதாரர்களுடன் மிகநெருக்கமாகப் பணியாற்றும்-என்றார். (க-இ)

# ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனவழிப்புத் தொடர்கின்றது!

## அவுஸ்திரேலிய செனட்டர் தெரிவிப்பு

**கான்பெரா, மே 18**

**ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனவழிப்புச் செயற்பாடுகள் இலங்கையில் தற்போதும் தொடர்கின்றன என்று அவுஸ்திரேலிய செனட்டரான டேவிட் ஷூப்ரிட்ஜ் தெரிவித்தார்.**

இலங்கை விவகாரம் தொடர்பில் அவுஸ்திரேலிய செனட் சபையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- இந்த வாரம் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகள் வாரமாக அமைந்துள்ளது. இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் கொடூரக் குற்றங்களை இந்த நாள்களில் உலகம் நினைவுகூர்ந்து வருகின்றது. பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிக்குள் சுமார் 3 இலட்சம் மக்கள் அடைக்கப்பட்டு, தொடர்ந்து குண்டுவீச்சுகளுக்கும் பீரங்கித் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். தமிழர் இனப்படுகொலை என்பது 2009ஆம் ஆண்டில் ஒரே நாளில் நடந்த சம்பவமல்ல. அது பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வந்ததுடன், இன்றும் அதன் விளைவுகள் தொடர்கின்றன. ஆயுத மோதலின் இறுதி மாதங்களில், தமிழர்களுக்கு எதிராகக் கொலைகள், கட்டாயக் காணாமலாக்கல்கள், தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவல்கள், சித்திரவதை, பாலியல் வன்கொடுமைகள் மற்றும் மனிதாபிமான உதவிகளை மறுத்தல் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக சர்வதேச மட்டத்தில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தற்போதும் அத்தகைய இனவழிப்புச் செயற்பாடுகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்கின்றன- என்றுள்ளது. (ம)

# பொலிஸ் திணைக்களத்துக்கு விரைவில் 10,000 பேர் இணைப்பு

கொழும்பு, மே 18

பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் 10 ஆயிரம் புதிய உத்தியோகத்தர்களை விரைவில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். புத்தளத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்பு நிலைமை தொடர்பான விசேட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

5 ஆண்டுகளுக்கும் மேலாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த பதவியுயர்வுகளை மிகவிரைவில் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அத்துடன் பொலிஸ் சேவையை தர ரீதியாகவும், உயர்தர தொழில்முறை சேவையாகவும் மேம்படுத்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கமைய, பொலிஸ் நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பெருமளவிலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது- என்றார். (க-இ)




# இனப்படுகொலை நினைவு ஊர்தி புதுக்குடியிருப்பைச் சென்றடைவு

கிளிநொச்சி, மே 18

இனப்படுகொலை நினைவுகளைச் சுமந்த ஊர்திப்பவனி நேற்றுப் புதுக்குடியிருப்பைச் சென்றடைந்தது. இனப்படுகொலையில் இறந்தோரை அஞ்சலிக்கும் வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த சில தினங்களாக விசேட ஊர்திப் பவனி முன்னெடுக்கப்பட்டு வந்தது. அந்த ஊர்தியே நேற்று புதுக்குடியிருப்பைச் சென்றடைந்தது. இன்றையதினம் முள்ளியவளை ஊடாக முள்ளிவாய்க்கால் முற்றத்தை அடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-113)

# போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைது

கொழும்பு, மே 18

கல்கிஸ்சை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹுலுத்தா கொடை வீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 925 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (க-இ)

# மறைந்த ஊடகவியலாளர் சலீமுக்கு நினைவஞ்சலியும், மலர் வெளியீடும்

கொழும்பு, மே 18

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், கிழக்கு மாகாணத்தில் மூத்த ஊடகவியலாளர் ஏ.எல்.எம்.சலீமின் நினைவஞ்சலியும், நினைவு மலர் வெளியீடும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் அரசியற்தலைவர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பங்கேற்று அவர் பற்றிய நினைவுப் பேருரைகளை ஆற்றினர். தொடர்ந்து அவர் பற்றிய மலர் வெளியிடப்பட்டது. அந்த நூலில் பேராசிரியர்கள் உள்ளிட்ட அவருடன் சேவையாற்றியவர்கள் 37 பேர் ஊடகவியலாளர் சலீமுடனான ஊடகப் பயணத்தை நினைவுகூர்ந்துள்ளனர்.

நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் அடுத்த ஊடக விருதை சலீ[illegible] வழங்குவதாகத் தெரிவித்தார். (க)




# அப்ப எங்க சிரட்டை?

மரம் தெரியாதவனுக்கு இலை பிடுங்கிக் காட்டினால் பரவாயில்லை, ஆனால் மரத்தோடையே வாழ்ந்தவைக்கு வெளியால இருந்து வந்தவை இலையைப் பிடுங்கி 'இதுதான் இலை' எண்டு விளக்கம் குடுத்தால் எப்பிடி இருக்கும்? அப்பிடியான விளையாட்டுகள் தான் இஞ்ச நடந்து கொண்டிருக்குது. இண்டைக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல். போனகிழமை முழுக்க இனவழிப்பு வாரமா பிரகடனம் செய்து எல்லா இடமும் அஞ்சலியள் நடந்ததோட, சந்திக்குச் சந்தி கன இடங்களில முள்ளிவாய்க்கால் கஞ்சியும் குடுத்தவை. எங்களுக்கு நடந்த அக்கிரமத்தை அடுத்த சந்ததிக்கும் அதே வெக்கையோட சொல்லுறதுக்கு ஒரு உணர்வுபூர்வமான குறியீடா இப்ப எங்களிட்ட மிஞ்சி இருக்கிறது இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சிதான். அதை எல்லாரும் தாங்களாவே காய்ச்சிக் குடுக்கிறதும், றோட்டால போய்வாறவை அதைக் குடிக்கேக்க எங்கட இனத்துக்கு நடந்த அட்டூழியங்களைப் பற்றி அந்தக் கொஞ்சநேரமாவது நினைக்கிறதும், கதைக்கிறதும் நீதிக்கான குரலை சாகவிடாமல் வைச்சிருக்கும்.

ஆனால் செய்வன திருந்தச் செய்யவெல்லோ வேணும். முள்ளிவாய்க்கால் கஞ்சி எப்பிடி வந்தது? கடைசிச் சண்டை முள்ளிவாய்க்காலில நடக்கேக்க, சனத்திட்ட சாப்பிட ஒண்டுமிருக்கேலை. அதால கையில இருந்த அரிசியை உப்புதண்ணிக்க போட்டு கஞ்சியாக் காய்ச்சித்தான் உயிரைப் பிடிச்சு வைச்சிருந்தவை. சிலவேளையளில அங்கர்மா கிடைச்சால் அதையும் கொட்டி கஞ்சி காய்ச்சியிருக்கினம். எண்டாலும் பெரும்பாலும் அரிசியும், உப்பும், தண்ணியும் மட்டும் தான் அந்தக் கஞ்சிக்குள்ள இருக்கும். அதுதான் முள்ளிவாய்க்கால் கஞ்சி. இப்ப சில இடங்களில ஏதோ சித்திரைக்கஞ்சி மாதிரி நல்லா பால் விட்டு, உப்பு புளியெல்லாம் அளவாப் போட்டு வாய்க்கு இதமாக் காய்ச்சுகினம். அப்பிடிக் காய்ச்சின கஞ்சியை சிரட்டையில குடுக்கிறதுதான் முள்ளிவாய்க்கால் கஞ்சி எண்டு சொல்லுகினம்.


உண்மையில கடைசிச்சண்டை நடக்கேக்க தேங்காயைக் கண்ணால காண்றதே அரிதா இருந்தது. காப்புச் சங்கிலியைக் கழட்டிக் குடுத்திட்டு அதுக்குப் பதிலா ஒரு தேங்காய் வாங்கின சம்பவமெல்லாம் கடைசி நேரத்தில நடந்திருக்கு. அப்பிடித் தேங்காயே இல்லாத காலத்தில காய்ச்சின கஞ்சியைக் குடிக்கிறதுக்கு அங்க சிரட்டையே இருக்கேல லைனில நிண்டு பிளாஸ்ரிக், சில்வர் பாத்திரங்களில தான் கஞ்சியை வாங்கிக் கொண்டுபோய் சனங்கள் குடிச்சவை. அந்த வரலாறெல்லாம் தெரியாதவைதான் இப்ப சிரட்டைக்குள்ள பால்விட்டுக் காய்ச்சின கஞ்சிதான் முள்ளிவாய்க்கால் கஞ்சி எண்டு பாடமெடுத்துக் கொண்டு இருக்கினம். கடைசிச்சண்டையில எங்கட வாழ்க்கை உப்புக்கரிச்ச நிலத்தில கண்ணீருக்குள்ள தான் இருந்தது. அந்தநேரம் ஆரும் கஞ்சி ரேஸ்டா இருக்கோ எண்டு பாக்கேலை. ஏதோ உயிரைக் காப்பாத்த என்ன கிடைக்குதோ அதைக் குடிச்சால் காணும் எண்டு இருந்தவை. அதால இனிமேல் தண்ணியும், உப்பும், அரிசியும் மட்டும் போட்டுக் காய்ச்சிறதோட, சிரட்டையிலயும் குடிக்காமல் வேற பாத்திரங்களில குடுக்கிறதுதான் உண்மையான முள்ளிவாய்க்கால் கஞ்சியின்ர உணர்வைக் கடத்தும். சம்பந்தப்பட்டவை இதைக் கவனத்தில எடுப்பினமோ?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பரந்தாமன் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு கற்சிலைமடுவில் நேற்றுமுன்தினம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது ஈகைச் சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தப்பட்டு, மலர் தூவி உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. (ம-27)





முள்ளிவாய்க்கால் நினைவுவாரத்தை முன்னிட்டு கம்பர்மலை சந்தியில் அமைந்துள்ள முதல் மாவீரர் சங்கர் நினைவிடத்தில் கம்பர்மலை இளைஞர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது. (ச)





## கருவறை

முள்ளியே எமது மூலஸ்தானம்
மூடாத கதவுடைய சந்நிதானம்
பள்ளியே கொள்ளாத கருவறை
பல்லாயிரம் உயிர்களின் இரத்தக்கறை
கொள்ளி வைத்த உடல்கள் அங்கு இல்லை
கூட்டிவைக்க அங்கு எவரும் இல்லை
அள்ளிவைக்க மண்ணும் கண்ணீர் விடும்
ஆட்டிப்படைக்கும் மந்திரங்கள் அடங்கிவிடும்!

● கே.எஸ்.சிவஞானராஜா



டென்மார்க்கின் கொல்பேக் நகரில் உள்ள புனித எலிசபெத் தேவாலயத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வழிபாடுகள் நேற்று மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன. (ம)

## முள்ளிவாய்க்கால் எரியும் ஒரு பெருநெருப்பு

வரைபடத்தில் தேடாதே...
அது வெறும் ஊரின் பெயரல்ல!
சிதைக்கப்பட்ட குருதியால்
உலகத் தமிழன் நெஞ்சில்
எழுதப்பட்ட பேரடையாளம்!
கொத்துக் கொத்தாய் எம் சனம்
செத்துச்செத்து மடிந்தபோது,
திக்கற்றுக் கிடந்த எம் தலைக்கு மேல்
ஒன்பது நாடுகள் கைகோர்த்து
ஒட்டுமொத்தமாய் எம்மைக் கொன்று குளித்தன!
பூமிப்பந்தின் வலி முழுவதையும்
ஒற்றைப்பரப்பில் சுமந்து நின்றதே,
அந்த முள்ளிவாய்க்கால் முள்நிலம்!
இருண்ட வானில் ஒளிரும்
ஒற்றை விண்மீனாய்,
காலம் எமக்குத் தந்த
ஒற்றைத் தலைவன் இருக்கின்றான்!
அவன் நிழல் எம்மைக் காக்கும் என்ற
ஒரேயொரு பெரும் நம்பிக்கையோடுதான்
எம் கால்கள் முன்னோக்கி நடந்தன...

ஆனால்...
அத்தனை அறங்களையும் குழிதோண்டிப் புதைத்து,
அசுரபலம் கொண்ட அந்த ஒன்பது நாடுகள்
எம் உயிரையும், உலகத்தையும் அழித்து முடித்தன!
முடிவல்ல இது தொடக்கம்...
உடல்கள் மடிந்திருக்கலாம்,
ஆயுதங்கள் மௌனித்திருக்கலாம்...
ஆனால், அவர்கள் விதைத்த நீதிக்கான தாகமும்,
தலைவன் தந்த திமிரும்
தலைமுறைகளின் குருதியில் இன்னும் கொதிக்கிறது..

முள்ளிவாய்க்கால் என்பது
அழுது முடிப்பதற்கான இடமல்ல,
எழுந்து நிற்பதற்கான அத்திபாரம்.

● உருத்திரபுரம் விமல்

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி சுமுக உறவு ஏற்படக்கூடும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** பயணங்களைத் தவிர்ப்பது அவசியம். வீட்டில் பணிச்சுமை அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** திட்டமிட்டு செயற்படவேண்டிய நாள். உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**தனுசு:** பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். வியாபாரத்தில் சக வியாபாரிகளிடம் கவனமாக இருக்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம்.

**மீனம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## உயிர்க்கூடுகளின் ஓலம்...!

மே 18. தமிழர்களின் நாட்காட்டியைப் பொறுத்தவரை இதுவொரு சாதாரண நாள் அல்ல. மரணம் தன் இரும்புப்பிடியால் எம்மைப் பற்றிக் கொள்ள குருதிச்சகதி பெருக்கெடுத்த நாளது. ஆதலால், இந்தத் திகதிக்கு ஒரு தேசிய இனத்தின் இதயத்துடன் கலந்திருக்கும் கனமுணர்ச்சி உண்டு. உலகம் கண்மூடி மௌனித்திருக்க, ஒன்பது நாடுகளின் துணையுடன் சிங்கள பேரினவாதம் தன் வெறியாட்டத்தை மொத்தமாகக் கொட்டித்தீர்த்து இன்றுடன் ஆண்டுகள் 17.

எங்கள் உயிருக்கு நிகரான உறவுகளின் அன்றைய வாழ்க்கையெல்லாம் ஒரு மண்வெட்டி, சில உரைப்பைகள், நான்கு தடிகள் அவ்வளவே. உணவில்லை, உறக்கமில்லை, இருந்ததெல்லாம் எங்கும் மரண ஓலம் மட்டுமே. பச்சிளம் குழந்தைகள் முதல், பல தலைமுறைகள் கண்ட பாட்டி, பூட்டன் வரை கொத்துக் கொத்தாகச் செத்துமடிய அவர்களுக்கான இறுதிச் சடங்குகளைச் செய்வதற்குக்கூட எமக்கு அவகாசம் இருக்கவில்லை. ஒவ்வொரு உயிர்க்கூடுகளும் இன்னொரு உயிர்க்கூட்டைக் காப்பாற்றுவதற்காக நகர்ந்து கொண்டிருந்தன. முள்ளிவாய்க்காலில் எங்களின் இறுதிநாள்கள் ஒரு வெற்றியையோ அல்லது ஒரு தோல்வியையோ நோக்கி நகர்ந்தது என்று எவராவது கூறினால், அது அறியாமையின் வெளிப்பாடு. உயிர் வாழ்வதற்கான சிறு வாய்ப்பொன்று எமக்கு அமைந்துவிடாதா என்பதுதான் அன்றைய நாள்களில் எங்களின் ஒற்றைப் பேரவா. ஆனால், அந்த இனக் கூட்டம் உயிருடன் மீள்வதற்கான அத்தனை ஏது நிலைகளும் சிங்களப் பேரினவாதத்தின் கொடும் கரங்களால் ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்டன. போரியல் முறைகளுக்குப் புறம்பாகவும், சர்வதேச யுத்த நெறிகளுக்கு மாறாகவும் குருதியால் தோய்க்கப்பட்டது முள்ளிவாய்க்கால் மண்.

சிறுதுண்டு நிலத்தில் பல்லாயிரம் தமிழர்களின் உயிர்கள் பகடையாக்கப்பட்டிருந்தன. காலை உரையாடியவர்கள் மாலை பிணமாகிக் கிடந்தனர். விருந்தோம்பலில் உலகுக்கு நெறிமுறை காட்டிய தமிழினம் கஞ்சியை மட்டுமே மூவேளை உணவாகக் கொண்டிருந்தது. பல நாள்களில் அதுவுமில்லை. உமிக்குள் அரிசி தேடிய அவலமும் அங்கேதான் நடந்தேறியது. போர் முடிவுக்கு வந்து 17 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்று எங்களின் உயிர்க்கூடுகளில் எரிந்த தீயின் வெம்மை இன்று மேலும் கனன்று கொண்டிருக்கின்றதே அன்றி அது அணைந்தபாடில்லை. உடலில் ஏற்பட்ட காயங்களை விடவும், மனதில் ஏற்பட்ட காயங்கள் கொடூரமானவை. அந்தக் காயங்களுக்கு இன்றளவும் மருந்திடப்படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் இன்றும் தாய்மார்கள் தேடிக்கொண்டிருக்கின்றனர். இன்னும் பலர், தம் பிள்ளைகளைக் காணாமலேயே இறந்துவிட்டனர். அரசியற்கைதிகளின் விடுவிப்பில் இருந்த கடைசிநம்பிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக அஸ்தமித்துவருகின்றது. பரிகாரம் தேடுவதற்குப் பதிலாக, பௌத்த பேரினவாதத்தைத் திணிப்பதிலேயே ஸ்ரீலங்கா அரசுகள் இன்றும் தீர்க்கமாக உள்ளன. திசைகாட்டி அரசும் அதற்கு விதிவிலக்கல்ல. இத்தகைய துன்பச் சிலுவைகளை இந்தத் தேசம் எங்கு தான் இறக்கிவைக்கப் போகின்றது? முள்ளிவாய்க்காலின் வெம்மை இந்தத் தீவை பல வழிகளில் சுட்டெரித்தே வருகின்றது. அது இனியும் தொடரவே செய்யும். ஏனெனில், தமிழர்களின் தீர்க்கமான நம்பிக்கைகளில் இறையும், வினையும் இரண்டறக் கலந்தவை.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### பொய்யாமொழி

**கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்**
**நடுவொரீஇ அல்ல செயின்**

**பொருள்:** தன் நெஞ்சம் நடுவுநிலைமை நீங்கித் தவறு செய்ய நினைக்குமாயின், "நான் கெடப்போகின்றேன்' என்று ஒருவன் அறிய வேண்டும்.



## மடு — கீரிசுட்டான் வீதியை சீரமைக்குமாறு போராட்டம்



**மன்னார், மே 18**

**மடு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கீரிசுட்டான் பிரதான வீதியைச் சீரமைக்குமாறு வலியுறுத்தி பொதுமக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.**

இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:-
மடு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கீரிசுட்டான் பிரதான வீதி நீண்டகாலமாகச் சீரமைப்பின்றி உள்ளது. மழைக் காலத்தில் இந்த வீதியால் பயணிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. இதுதொடர்பில் பல தடவைகள் நாங்கள் சுட்டிக்காட்டிய போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாவது எமது கோரிக்கைகளைச் செவிமெடுத்துச் செயற்படவேண்டும் என்று தெரிவித்தார். (ம-41-213)

### அடுத்தகட்டக் கடன்

## மே 27ஆம் திகதி ஐ.எம்.எப். ஆய்வு!

கொழும்பு, மே 18
இலங்கைக்கு அடுத்தகட்டக் கடனுதவியை வழங்குவது தொடர்பில் எதிர்வரும் 27ஆம்திகதி நாணயநிதியம் ஆய்வில் ஈடுபடவுள்ளது.
இலங்கைக்கான கடன் திட்டத்தின் ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகளை மதிப்பீடு செய்வதற்காகவே மே 27ஆம் திகதி நாணய நிதியம் கூடவுள்ளது. அந்த மீளாய்வு நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேறினால், இலங்கைக்கு சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான நிதியுதவி விடுவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கிளிநொச்சியில் நேற்று இலவச மருத்துவ முகாம்

கிளிநொச்சி, மே 18
கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் யாழ். மருத்துவச் சங்கம் மற்றும் மருத்துவப் பிரதிநிதிகள் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாமொன்று நேற்று நடைபெற்றது.
பிரமந்தனாறு மக்களின் தேவைப்பாடுகளை இனங்கண்டு, அவற்றை நிவர்த்தி செய்யும் வகையிலேயே இந்த மருத்துவ முகாம் முன்னெடுக்கப்பட்டது.
இதில் பொதுமருத்துவ நிபுணர்கள், குழந்தை மருத்துவ நிபுணர், தோல் மற்றும் சரும நோய் நிபுணர்கள் சத்திரசிகிச்சை நிபுணர் மற்றும் பெண் நோயியல் மருத்துவநிபுணர் பல் மருத்துவ நிபுணர் ஆகியோர் கலந்துகொண்டு மக்களுக்கான சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினர். (ம-55)

## மின்சாரம் தாக்கி மூதாட்டி இறப்பு


கொழும்பு, மே 18
நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரத்துக்குப் பொருத்தப்பட்டிருந்த மின் இணைப்பில் ஏற்பட்ட கசிவால், மின்சாரம் தாக்கி மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கொடவெஹெர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலுகொல்லப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. (க-இ)

## இ.போ.ச. தலைவருக்கு எதிராக ஆதாரங்களுடன் முறைப்பாடு!

கொழும்பு, மே 18
இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு எதிராக எழுந்துள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் பழிவாங்கல் நடவடிக்கைகள் தொடர்பில் ஆதாரங்களுடன் ஜே.வி.பி. தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்படும் என்று சுயதொழில் செய்பவர்கள் சங்கத்தின் தலைவர் பிரதீப் சார்லஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு பேருந்து நிலைய மறுசீரமைப்புப் பணிகளின் போது, தரமற்ற பொருள்களைப் பயன்படுத்தி அதன் மூலம் போக்குவரத்துச் சபைத்தலைவர் பெருமளவு இலஞ்சம் பெற்றுள்ளார். அத்துடன், பேருந்து நிலையத்திலுள்ள தற்போதைய கடைகளை அகற்றிவிட்டு, தனது ஆதரவாளர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளிக்க தன்னிச்சையாகச் செயற்படுகின்றார். அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு மாறாகச் செயற்படும் இவ்வாறான ஊழல் அதிகாரிகளை நாங்கள் தப்பிக்க விட மாட்டோம் - என்றார். (க-இ)


நாளை
செவ்வாய்க்கிழமை- வைகாசி 04
19.05.2026
சுபநேரம் : 10.22 – 11.52
ராகுகாலம் : 02.52 – 04.22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ் வித்தியாலய மாணவர்களின் மாதிரிச்சந்தை கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் தலைமையில் நடைபெற்றது. (ச-9)



முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்களின் ஏற்பாட்டில் முறிகண்டி பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்றது. இதன்போது போரில் உயிரிழந்தவர்களுக்கான சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டதையடுத்து கஞ்சி பரிமாறப்பட்டது. (ச-55)



பச்சிலைப்பள்ளி பிரதேச கலாசார அலுவல்கள் அலகின் வருடாந்த கலாசார ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கான ஓவியப் பயிற்சிப்பட்டறை பளை முகாவில் அ.த.க பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. அதிபர் அ. சுரேஷ்காந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தரும் பிரதேச கலைஞருமான வே.வசந்தரூபன் கலந்துகொண்டார். (ச-9)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

**சரஸ்வதி தேவராசா**

தோற்றம் 19.05.1944 — மறைவு 27.05.2017



திதி - பூர்வபஷ்ச துதியை (18.05.2026)

ஆண்டுகள் ஒன்பது ஆகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது

**நினைவில் கணவர்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**
புதுவீதி (நீதிராஜா வீதி)
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
077 615 3877, 021 222 5499

(CS/55264) H-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 07 . 1942 — மறைவு 09 . 05 . 2026

### அமரர் திருமதி வீரப்பமோறா இராசமணி

வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரப்பமோறா இராசமணி அவர்கள் 09.05.2026 சனிக்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருத்தொண்டர் தில்லையம்பலம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரப்பமோறாவின் அன்பு மனைவியும், ராஜியின் பாசமிகு தாயாரும், ஜெயராஜ் அவர்களின் அன்பு மாமியும், அஸ்வினி, அஸ்விகா, அஸ்மிதா, அஸ்மிதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், பராசக்தி, செல்வராசா, குமாரசாமி மற்றும் தவமணி, புவனேஸ்வரி, கமலாம்பிகை, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், மீனாட்சிசுந்தரம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும், காலஞ்சென்றவர்களான இராசபூபதி, செல்லத்துரை, லீலாவதி, தியாகராஜா, நடராசா மற்றும் சிவமணி, குமாரசாமி, மங்கையற்கரசி, காலஞ்சென்றவர்களான குலசேகரம், சேனாதிராசா, மனோன்மணி, இராசம்மா, பூபதி, சாரதாம்பாள் மற்றும் யோகவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2026) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

**இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல்: தி.செல்லத்துரை, கு. கமலாம்பிகை**
**077 989 8870**
**182, பலாலி றோட், கந்தர்மடம்.**

(CS/61422) J-1

## மரண அறிவித்தல்



மலர்வு 19 . 04 . 1942 — உதிர்வு 16 . 05 . 2026

### அமரர் நாகேஸ்வரி துரைராசா

அல்வாய் தெற்கு புளியடியைப் பிறப்பிடமாகவும், ராஜகேந்திராவை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா நாகேஸ்வரி அவர்கள் 16.05.2026 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வு நிலை ஆசிரியர் துரைராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - தங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - ஆசைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தர்மதேவி செல்வலிங்கம் அவர்களின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கதிரவேல் தனலக்குமியின் உடன்பிறவாச் சகோதரியும், ஸ்ரீ.மல்லிகாதேவி, சத்தியலிங்கம் (பொறியியலாளர் - லண்டன்), யோ.ரஞ்சினிதேவி (ஓய்வுநிலை ஆசிரியர்), கு.விஜயா, சாந்தலிங்கம் (பிரான்ஸ்), கு.சாந்தினி (சுவிஸ்), கா.அனுஷா (லண்டன்), சயந்தலிங்கம் (இ.போ.ச.பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், ச.ஸ்ரீதரன் (ஓய்வுநிலை முகாமையாளர், மக்கள் வங்கி), ச.கௌசல்யா (லண்டன்), ந.யோகரத்தினம் (ஓய்வுநிலை உத்தியோகத்தர், இலங்கை வங்கி), ஐ.குமரதாசன் (ஆசிரியர்- யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), சா.சஜிதா (சுகி, பிரான்ஸ்), செ.குமரகுரு (சுவிஸ்), க.காண்டீபன் (லண்டன்), ச. லக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீமுகுந்தன்-மிதுரா, ரவிமயூரன்-நிரூபிகா, ஜெனத்மேனன்-நிரோஜிகா, ஸ்ரீரமணன், புவீஸ்வரன்-சௌமியா (சுவிஸ்), பிரணவன் (டோகா), சந்தியா, வைஷ்ணவி, சைந்தவன், லக்ஷ்மி, பிரசாந்தி, தீப்திகா, அட்சரன், சரணிகா, சங்கீத், அட்ஷரா, அஞ்சலா, தாரணி, வினுஷன், விஷ்னுகீதன், சாருகீதன் ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும், துவானிகா, இராகிதன், மிர்ணாளினி, கார்மிகா, ஆதிரா, மித்திரா, ஆர்கவி ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, தங்கராசா, சாம்பசிவம் மீனாட்சிஅம்மா, இராஜலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், செ.சாம்பசிவம், சி.சரசா, த.சர்மிளா, பா.ரம்மியா, செ.தனேந்திரா ஆகியோரின் பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2026) திங்கட்கிழமை பி.ப 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அவ்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராஜகேந்திரா,**
**மனோகரா,**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0775183118, 0776913115**

(CS 61461) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 03 . 1939



மறைவு 28 . 05 . 2025

அமரர்

### அமிர்தலிங்கம் இராசமணி

(முன்னாள் யாழ் போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்)

**திதி: வளர்பிறை துதியை (18.05.2026)**

பாசச் சிறுகூட்டில் பக்குவமாய் எம்மை வைத்து
நேசக் கதைகள் சொல்லி நெறி தவறா வழிகள் காட்டி
ஆசையுடன் வளர்த்து எமை ஆளாக்கி வைத்த தாயே!
ஏன் பிரிந்தாய் அம்மா? எம்மை விட்டு ஏன் பிரிந்தாய்?
நீயில்லா இடமிங்கு என்றும் நிரந்தர வெறுமையாச்சு
நெஞ்சம் கனக்கிறது அம்மா நீண்ட துயர் தொடர்கிறது
ஆனாலும் வாழ்கின்றோம் அம்மா உன் ஆசியுடன்
ஓம் சாந்தி!

9/30, விகாரை வீதி,
திருகோணமலை.

(cs 61451) (N-1)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்

## நீங்கா நினைவுடனே...

14ஆம் ஆண்டு | 1ஆம் ஆண்டு





அமரர்
### சின்னப்பா குணரத்தினம்
(ஓய்வுநிலை உபதபாலதிபர், கனகராயன்குளம்)

மண்ணில் 02.01.1941
விண்ணில் 05.12.2012

அமரர்
### குணரத்தினம் கமலாம்பிகை
(முன்னாள் உபதபாலதிபர், விடத்தற்பளை)

மண்ணில் 13.02.1945
விண்ணில் 28.05.2025

இல்லங்களில் உலா வந்த தெய்வங்களே!..... எம்
உள்ளங்களில் என்றும் நிறைந்திருப்பீர்களே....! எம்
நல் வாழ்வுக்கு வழிகாட்டி நீங்களே.....!


தற்போதைய முகவரி:
இல.695/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(Cr 47555) (N -1)

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்
(ஸ்ரேசன் றோட், பளை)

# மரண அறிவித்தல்

## செல்வரத்தினம் இராசசிங்கம்



தோற்றம் 20.03.1948

மறைவு 16.05.2026

பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் இராசசிங்கம் அவர்கள் 16.05.2026 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் நல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயக்குமாரி, ஜெயதேவி, குகதாஸ், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேந்திரன், சிவராசா, மலர்ஒளியாழ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவாந்தி - சுஜிதரன், டினோசா - சுஜிந்தர், விதுசன் - டிசானி, கௌதமன், மதுமிதா - வினுஷன், தனுசன், நிருத்திகா, ஜெஸ்மி ஆகியோரின் அன்புப் பேரனும், ஆதிரன், ஸ்ரீநியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரச்சி இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அரசடி வீதி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 795 0721, 077 811 0813

(CS/61460) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வடக்கின் கல்விப் பாரம்பரியத்தை மீட்டெடுத்து, ஒரு புதிய பொற்காலத்தின் விடியலை நோக்கி Northern Uni

இலங்கைத்தமிழர்களின் வாழ்வியலோடும், ஆன்மாவோடும் பிணைக்கப்பட்டது கல்வி. அறிவுப் பசியைத் தீர்த்துக்கொள்வதற்காக எத்தகைய இன்னல்களையும் தாங்கிக் கொள்ளும் ஒரு சமூகத்தின் அடையாளமாகவே எமது கல்விப் பாரம்பரியம் விளங்குகின்றது. அந்த அறிவார்ந்த மரபையும், தொன்மையான கல்விப் பெருமையையும் நவீன காலத்தின் சவால்களுக்கு ஏற்ப மீளுருவாக்கம் செய்யும் உன்னத நோக்குடன், மாணவர்களின் கல்வி விடியலுக்கான மாபெரும் கனவாக மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட Northern UNI, இன்று பல வெற்றிகளுடன் வீறுநடை போடுகின்றது. சிறியதொரு விதையாகத் தனது பயணத்தை ஆரம்பித்த Northern UNI, இன்று பல மாணவர்களின் வாழ்விற்கு நிழல் தரும் ஒரு விருட்சமாக பரந்து விரிந்து தனது 3ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது.

நிதி நெருக்கடிகளோ, சமூகத் தடைகளோ அல்லது புவியியல் ரீதியான எல்லைகளோ திறமையான மாணவர்களின் உயர்கல்விக் கனவுக்குத் தடையாகக் கூடாது என்ற தீர்க்கதரிசனத்துடன்உருவாக்கப்பட்டது தான் Northern Uni. இன்று தனது மூன்றாவது அகவையை எட்டியிருக்கும் Northern Uni, வெறும் ஒரு கல்வி நிறுவனமாக மட்டுமல்லாமல், வட கிழக்கு மாணவர்களின் வாழ்வில் நம்பிக்கையின் அடையாளமாகவும், புதிய விடியலின் சின்னமாகவும் நிமிர்ந்து நிற்கிறது.

**வரலாற்றுத்தடைகளில் ஒரு புதிய கல்விப் பயணம்**

வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திய பயணங்கள் யாவும் புதிய பாதைகளைத் தேடித்தான் ஆரம்பமாகின. உலகப் புகழ்பெற்ற கடற்பயணி மாகெலன் புதிய கடல் வழிகளைக் கண்டறிந்து உலகை இணைத்ததைப் போல, Northern UNI இன்று போர் வடுக்களாலும், வறுமையின் பிடியாலும், போதிய வாய்ப்புகள் இன்மையாலும் முடங்கிக் கிடந்த மாணவர்களின் கனவுகளுக்கு சிறகுகளை முளைக்கச் செய்துள்ளது.

1970களின் ஆரம்ப காலங்களில், நிலவிய கல்வி எழுச்சியையும், மருத்துவ மற்றும் பொறியியல் துறைகளில் தமிழ் மொழிமூல மாணவர்கள் படைத்த இமாலயச் சாதனைகளையும் வரலாறு இன்றும் போற்றுகின்றது. தற்போதைய தேவைக்கேற்ப கல்வியை, மீளுருவாக்கம் செய்து தொழில்நுட்பம் வளர்ந்த இன்றைய நவீன யுகத்தில் மீண்டும் எமது மண்ணில் நிலைநாட்டி, புதிய கல்விப் புரட்சியைத் தடையின்றி முன்னெடுப்பதையே Northern UNI தனது பிரதான இலட்சியமாகக் கொண்டுள்ளது.

**மிகச்சிறந்த தெரிவு (The Best Fit)**

"கல்வி என்பது எட்டாக்கனி" என ஏங்கும் ஏழை மாணவர்களுக்கு 'கைகொடுத்து கல்வி என்பது செல்வத்தால் தீர்மானிக்கப்படாது திறமையால் ஆளப்பட வேண்டியது 'எனும் உறுதிமிக்க நோக்கத்தோடும், உன்னத இலட்சியத்தோடும் Northern Uni தனது பணிகளை முன்னெடுக்கின்றது. வடக்கு மற்றும் கிழக்கில் இன்றும் போருக்குப் பின்னரான பொருளாதார நெருக்கடிகளையும், நிலையற்ற வருமானத்தையுமே பெரும்பாலான குடும்பங்கள் நம்பியுள்ளன. இதன் காரணமாக அரசு பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி கற்க முடியாத பிள்ளைகள் பல இலட்சம் ரூபா பெறுமதியான உயர்கல்விச் செலவினை ஏற்பது என்பது எட்டாத கனவாகவே இருந்து வந்தது.

இத்தகைய சமூகச் சூழலில், திறமை இருந்தும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்கு உயர் கல்வி எட்டாக் கனியாகப் போகாமல் இருக்க செயல்வடிவமாக, Northern Uni பல புலமைப்பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்துகின்றது.

**புலமைப்பரிசில் 1 : சாதனையாளர் புலமைப்பரிசில் (Performers Scholarship):**

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 3A சித்திகளைப் பெற்று, மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். இவர்களுக்கு 100% கல்விக்கட்டணச் சலுகை வழங்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் தங்குமிடம் மற்றும் இதர தேவைகளுக்காக மாதாந்தம் 50,000 ரூபா உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. இதன் மூலம் எவ்வித நிதி சார்ந்த கவலைகளுமின்றி மாணவர்கள் தங்கள் உயர்கல்வியைத் தடையின்றித் தொடர முடியும்.

**புலமைப்பரிசில் 2 : பன்முகத் திறமைக்கான அங்கீகாரம்:**

உண்மையான கல்வி என்பது வெறும் வகுப்பறைப் பாடங்களுக்குள் மட்டும் சுருங்கிவிடுவது அல்ல. பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி இருந்தும் அனுமதி பெறாத மாணவர்களுக்கென விளையாட்டு, தலைமைத்துவம், சமூகச் சேவை, கலை மற்றும் கலாசாரத் துறைகளில் ஆர்வம் உள்ளவர்களை ஊக்குவிக்க இந்தப் பன்முகத் துறைகளில் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் 50%, 75% முதல் 100% வரை கல்விக்கட்டணத் தள்ளுபடிகள் வழங்கப்படுகின்றன.

**யாழ் கல்வி ஆதரா நிதியம்: Yarl Education Support (YES) Fund**

பொருளாதார ரீதியாக மிகவும் நலிவடைந்த, அல்லது வருமானம் எதுவுமற்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் எதிர்காலம் கருகிவிடக் கூடாது என்பதற்காகவும், "ஒரு மாணவனின் எதிர்காலத்தை அவனது தகுதியும் உழைப்புமே தீர்மானிக்க வேண்டும், அவர்களது குடும்பத்தின் வங்கிச் சேமிப்பு அல்ல" எனும் உயரிய நோக்கத்துடனும் இந்நிறுவனத்தின் நிறுவுநர் இந்திரகுமார் பத்மநாதனால் 'யாழ் கல்வி ஆதரா நிதியம் (Yarl Education Support Fund) என்ற விசேட திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது, இவ்வுயர்கல்வி நிறுவனம் சமூகத்தின் மீது கொண்டுள்ள அக்கறைக்குச் சான்றாகும்.

இத்திட்டத்தின் ஊடாக முன்னணி வங்கிகளுடன் இணைந்து ஒரு விசேட பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்படி, முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டுகளுக்கான கல்விச்செலவினை மாணவர் கல்வி கடனினை (Student Education Loan) வங்கியின் மூலம் பெற, மீதியிரண்டு வருடங்களுக்கான செலவினை Northern Uni ஏற்றுக்கொள்கின்றது. இதன் மூலம், கையில் பணம் இல்லாவிடினும் ஒரு மாணவன் தனது பட்டப்படிப்பை எவ்விதத் தயக்கமும் இன்றி ஆரம்பிக்க முடியும். இது மாணவர்களின் குடும்பங்களுக்கு ஒரு மிகப்பெரிய சமூகப் பாதுகாப்பை வழங்குகின்றது.

கல்வி அமைச்சு வழங்கும் வட்டியில்லா கடன் மூலம், உயர்கல்வியை தொடரும் வாய்ப்பு

உயர் நிலைத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள், அரசால் வழங்கப்படும் வட்டியில்லா உயர்கல்விக் கடன் மூலம் பட்டப்படிப்புகளை தற்போது Northern UNI இல் பெறமுடியும். கடனுக்கான வட்டியை அரசு ஏற்றுக் கொள்வதுடன், மாணவர்கள் தங்கள் உயர்கல்வியை முடித்த பின்னர் 7 அல்லது 8 ஆண்டுகளில் மாத தவணைகளாக கடன் தொகையை திருப்பிச் செலுத்தமுடியும்.

இந்தத் திட்டம், மாணவர்களின் உயர்கல்விக் கனவுகளை நிறைவேற்றும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைகிறது.
Open Day நிகழ்வில் பங்கேற்று, அன்றே தகுதியான பாடநெறிகளில் பதிவு செய்யும் மாணவர்களுக்கான சிறப்பு சலுகை

Northern UNI வழங்கும் Open Day நிகழ்வில் பங்கேற்கும் மாணவர்களுக்கு, கல்வி வாய்ப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் சிறப்புக் கட்டணச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

Open Day நிகழ்வில் பங்கேற்று, அன்றே தகுதியான பாடநெறிகளில் பதிவு செய்யும் மாணவர்களுக்கு, SLIIT City Uni வழங்கும் பாடநெறிகளுக்கு முதல் அரையாண்டு கட்டணத்தில் 15% தள்ளுபடியும், SLIIT University வழங்கும் பாடநெறிகளுக்கு முதல் அரையாண்டு கட்டணத்தில் 20% தள்ளுபடியும் வழங்கப்படுகின்றன.

இந்த சலுகை, உயர்கல்வி பயில்வதில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நிதிச் சுமையை குறைத்து, கல்வியை எளிதாகத் தொடர ஊக்குவிப்பதாகவும் அமைக்கின்றது.

**[illegible] தளம்**

வெறும் பட்டதாரிகளை மட்டும் உருவாக்குவதோடு ஒரு மண்ணின் உயர்கல்வி நிறுவனத்தின் பணிகள் நிறைவுறுவதில்லை. சமூகப் பொறுப்புள்ள, மனிதாபிமானம் மிக்க ஒரு சிறந்த தலைமுறையை உருவாக்குவதே அதன் இறுதி இலக்காகும். இதற்கேற்ப, Northern Uni தனது 3வது ஆண்டு நிறைவையொட்டி பல சமூக நலன் சார்ந்த நிகழ்வுகளை முன்னெடுக்கவுள்ளது. அதன் முதற்கட்டமாக முன்னெடுக்கப்படும் மாபெரும் இரத்ததான முகாம் போன்ற செயற்றிட்டங்கள், மாணவர்களிடையே சமூகத்தின் நன்மையை நோக்கமாகக் கொண்ட மனிதாபிமானப் பண்பை வளர்ப்பதுடன், சமூகத்தின் மீது அக்கறையுள்ள சிறந்த பிரஜைகளை உருவாக்குவதிலும் முக்கியமான பங்கு வகிக்கின்றது.

மேலும், மாணவர்களை உடல் உள வலிமையில், சிறந்தவர்களாக மாற்றும் நோக்கில், வளாகத்தினுள்ளே மேசைப்பந்து (Table Tennis), கரம் (Carom) போன்ற உள்ளக விளையாட்டுகளுடன், பிரதேச விளையாட்டுக் கழகங்களுடன் இணைந்து கிரிக்கெட் மற்றும் உதைபந்து மைதான வசதிகளும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. குழுவாகச் செயற்படுதல், விட்டுக்கொடுப்பு மற்றும் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கு இச் செயற்பாடுகள் பெரும் துணையாக அமைகின்றன.

**சாதனையாளர்களைக் கொண்டாடும் Northern Uni**

கல்வித்தரத்தினை எவ்வகையிலும் விட்டுக்கொடுக்க முடியாது என்பது Northern Uni மாணவர்களின் கொள்கையாகும். தொடர்ச்சியான அர்ப்பணிப்பை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு அரை ஆண்டு முடிவிலும் 3.70 க்கும் மேல் GPA பெறும் அதீத திறமையுள்ள மாணவர்கள் 'பீடாதிபதி பட்டியலில்' (Dean's List) சேர்க்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள்.

பீடாதிபதி பட்டியலில் இடம்பெறும் மாணவர்களில் முதல் 1% மாணவர்களுக்கு 100% புலமைப்பரிசிலும், இரண்டாம் 1% மாணவர்களுக்கு 50% புலமைப்பரிசிலும், மூன்றாம் 1% மாணவர்களுக்கு 25% புலமைப்பரிசிலும் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும்.

இம்முறை, மொத்த SLIIT மாணவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பட்டியலில், SLIIT NORTHERN UNI இன் வியாபார முகாமைத்துவத் துறையைச் (Business Management) சேர்ந்த 15-35% மாணவர்களும், தகவல் தொழில்நுட்பத் துறையைச் (IT) சேர்ந்த 2-10% மாணவர்களும் இடம்பிடித்து கௌரவிக்கப்படவுள்ளனர். இத்தகைய அங்கீகாரமானது, ஏனைய மாணவர்களிடையேயும் ஒரு ஆரோக்கியமான போட்டித்தன்மையையும், கற்கும் ஆர்வத்தையும் தூண்டுகின்றது.

**ஒரு புதிய யுகத்தின் ஆரம்பம்**

கல்விப் பாரம்பரியம் என்பது எமது அடையாளம் மட்டுமல்லாது, அது எமது இருப்பையும் தீர்மானிக்கின்றது. இதனை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் பணியை Northern Uni செவ்வனே செய்து வருகிறது.

வேலையின்மை, பொருளாதார ஸ்திரமற்றதன்மை மற்றும் புலம்பெயர்வு போன்ற காரணங்களால் பல குடும்பங்கள் எதிர்காலம் குறித்த அச்சத்தில் இருக்கும்போது, Northern Uni கல்வியின் ஊடாக ஒரு புதிய நம்பிக்கையை விதைக்கிறது. மூன்று ஆண்டுகள் என்பது ஒரு நிறுவனத்தின் வரலாற்றில் மிகச் சிறிய காலப்பகுதியாக இருக்கலாம், ஆனால், இந்த மூன்று ஆண்டுகளில் Northern Uni கடந்து வந்த பாதை, அதனால் பயனடைந்த மாணவர்கள் மற்றும் அந்தக் குடும்பங்களின் முகங்களில் மலர்ந்துள்ள நிம்மதிப் புன்னகையே, வரலாற்றுச் சாதனையை பறைசாற்றி நிற்கிறது

வறுமையின் நிழல் எமது மாணவர்களின் கனவுகளை இனி ஒருபோதும் சிதைக்க முடியாது. அறிவின் ஒளி எமது நாட்டின், விசேடமாக வடக்கு கிழக்குப் பகுதிகளின் ஒவ்வொரு இல்லத்தையும் சென்றடைய வேண்டும் என்பதே இந்த 3ஆவது ஆண்டு நிறைவின் உறுதிமொழியாகும். வடக்கின் கல்வி வரலாற்றில் Northern UNI ஒரு புதிய பொற்காலத்தின் விடியலாக என்றும் நிலைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈழத்தமிழர் அரசியல் விருப்பத்தை வெளிப்படுத்த வாய்ப்பளியுங்கள்

## ஈழத்தமிழர் உரிமைகள் பெருமன்று வலியுறுத்து

திருகோணமலை, மே 18

ஒன்றுபட்ட மக்கள் சக்தியாக எழுந்து, இனப்படுகொலைக்கான நீதியும் சுயநிர்ணய உரிமையும் அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வும் பெறப்பட வேண்டும். சர்வதேச மேற்பார்வையில் பொதுவாக்கெடுப்பு நடத்தி ஈழத்தமிழர் அரசியல் விருப்பத்தை வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும் என்று ஈழத்தமிழர் உரிமைகள் பெருமன்று வலியுறுத்தியுள்ளது. முள்ளிவாய்க்கால் நினைவு நாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஈழத்தமிழர் உரிமைகள் பெருமன்று இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2009 மே 19ஆம் தேதி முள்ளிவாய்க்காலில் முடிவடைந்த இறுதி நாள், ஈழத்தமிழர் வரலாற்றில் மட்டுமல்லாது, தமது சுயநிர்ணய உரிமையையும் இறைமையையும் காக்கப் போராடும் உலகின் அனைத்து இனங்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த நாளாகக் கருதப்படுகிறது. அந்நாளில் உச்ச கட்டத்தை எட்டிய இனப்படுகொலைக்கு இன்று வரை நீதியில்லை என்பதையும், தொடர்ச்சியாக நடைபெறும் மென்மையான கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பையும் இந்நாள் நினைவூட்டுகிறது. நீதியின்றி மீள்நிகழாமை உறுதிசெய்ய முடியாது என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

இறுதி எட்டு மாதங்களில் மட்டும் வடக்கில் 146,679 தமிழ் மக்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பது தெளிவில்லாத நிலையிலும், சர்வதேச சமூகம், குறிப்பாக ஐ.நா., தமது பொறுப்பை நிறைவேற்றத் தவறியுள்ளது என அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது. தற்போது நீட்டிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான திட்டத்துக்கும் இனப்படுகொலைக்கான முழுமையான குற்றவியல் ஆய்வளவை, காலவரம்பு, நோக்கம் மற்றும் தேவையான சான்று தரநிலைகளை உறுதிப்படுத்தும் அதிகாரம் இல்லை எனக் குறிப்பிடப்படுகிறது. எனவே, ஐ.நா. மீது அழுத்தம் கொடுத்தாலும் அதையே சார்ந்து நிற்காமல் மாற்று சர்வதேச வழிமுறைகளையும் தேட வேண்டும்.

1948 இனப்படுகொலைக் கூட்டறிக்கையின் கீழ் முழுக் காலவரம்பையும் உள்ளடக்கும் வகையில், காணாமலாக்கப்பட்டவர்களையும் சேர்த்துச் சுயாதீன, பாரபட்சமற்ற சர்வதேச விசாரணை அமைப்பை உருவாக்க வேண்டும். இனப்படுகொலை ஒப்பந்தத்தின் கீழ் குறைந்தது ஒரு நாடாவது இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்; தனிநபர் குற்றப்பொறுப்புகளுக்கான விசேட விசாரணை அமைப்பும் தேவை. செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பாக சர்வதேச நிபுணர் மேற்பார்வை ஏற்படுத்த வேண்டும். 6ஆம் திருத்தச் சட்டம் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கும் சட்டங்களை நீக்க வேண்டும். சர்வதேச மேற்பார்வையில் பொதுவாக்கெடுப்பு நடத்தி ஈழத்தமிழர் அரசியல் விருப்பத்தை வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-எ-இ)



முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு தொண்டைமானாறு இளைஞர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (எ-இ)

# 600 போதைமாத்திரைகளுடன் சந்தேகநபர் கைது

களுத்துறை, மே 18

களுத்துறை வடக்கு பகுதியில் சுமார் 600 போதைமாத்திரைகளுடன் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் களுத்துறை பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து நடத்திய கூட்டுச் சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பில் களுத்துறை பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு...

களம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் செல்லவுள்ள ஜனாதிபதி அங்கு நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பை இலக்காகக் கொண்டு மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள "முழுநாடும் ஒன்றாக" தேசிய வேலைத்திட்ட நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி அம்பாறை மாவட்டத்துக்குச் செல்லவுள்ள ஜனாதிபதி நிந்தவூர் கலாசார நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பங்கேற்கவுள்ளார். அம்பாறை நகரில் அமையவுள்ள புதிய வர்த்தகத் தொகுதிக்கான கட்டுமானப் பணிகளையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அவர் கலந்துகொள்ளவுள்ளார். (அ-எ-இ)

## பெருவிழா...

வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தன் பெருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல், வீதி தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஈடுபடும் நிலையில், சம்பிரதாய முறைப்படி காளாஞ்சி வழங்கப்பட்டு வருகின்றது. (அ-எ-17-66)

## பட்டப்பகலில்...

யும் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காந்தியூர் பகுதியில் சாரதி பயற்சி நடைபெறும் இடத்துக்கு சாரதிப் பயிற்சிக்காக வந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அறுத்துச் செல்லப்பட்டிருந்தது. அங்கிருந்தவர்கள் உடனடியாகப் பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து, பருத்தித்துறைப் பொலிஸார் நெல்லியடிப் பொலிஸாருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தனர். சில மணிநேரங்களில் சந்தேகநபர்கள் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் புலோலி மற்றும் கரவெட்டியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் குற்றப் பின்னணி கொண்டவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-100)


## கேள்வி அறிவித்தல் - 2026
## தேக்கம்(குஞ்சுக்குளம்) சுற்றுலா மைய உணவு விடுதி
## நானாட்டான் பிரதேச சபை

நானாட்டான் பிரதேச் சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட தேக்கம் (குஞ்சுக்குளம்) உணவு விடுதிக்கான (01.07.2026 - 31.06.2028) வரையான 24 மாதங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 18.05.2026–01.06.2026 பி.ப 2.00 மணிவரை
கேள்வி ஏற்கும் இறுதித் திகதி :- 01.06.2026 பி.ப 2.30 மணிவரை
கேள்வி திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 01.06.2026 பி.ப 2.30

கேள்விப் பத்திரம் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு **தலைவர், நானாட்டான் பிரதேசசபை, நானாட்டான்** எனும் முகவரிக்கு அரக்கு (சீல்) முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு நானாட்டான் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ **01.06.2026ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு** முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். கேள்விகள் உடனே பிரதேசசபையின் பிரதான அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். அதற்குபின் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

01. கேள்வி கோரும் தேக்கம் உணவு விடுதிக்கான கேள்விப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணம். மீளளிக்கக்கூடிய கேள்விவைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
02. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநபராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
03. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வியின் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
04. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
05. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ. நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
06. விடுதியை வாடகைக்கு எடுப்பவராலேயே விடுதி நடாத்தப்பட வேண்டும். வேறு ஒருவருக்கு வாடகைக்கு கொடுத்தல் ஆகாது.
07. தேக்கம் உணவு விடுதியை மீள கையளிக்கும் போது கட்டடத்திற்கோ. உபகரணங்களுக்கோ சேதம் ஏற்பட்டிருப்பின் சேதத்தின் தன்மை மதிப்பீடு செய்யப்பட்டு மேற்படி வைப்புத் தொகையிலிருந்து கழிக்கப்படும்.
08. பெற்றுக்கொள்ளும் கடையில் ஏற்படும் பாதிப்புகளுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
09. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருட்களை விற்பனை செய்வதோ. மதுபான வகைகளோ. போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருட்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன். கடைக் கட்டிட வளாகத்தினுள் மதுபானங்கள் மற்றும் போதை வஸ்துக்களின் பாவனையும் தடைசெய்யப்படுகின்றது. மேலும், கடைக்கட்டிடம் வேறு எந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
10. மாதாந்த குத்தகைப்பணம். குறித்த மாதத்தின் 31ம் திகதிக்குப் பிந்தாமல் தாங்களாகவே முருங்கன் உப அலுவலகத்தில் செலுத்த வேண்டும். தவறின். குத்தகைப்பணத்துடன் குத்தகைப் பணத்தின் பத்து சதவீதமான தண்டப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் தொடர்ந்து இரு மாதங்கள் செலுத்ததவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படும்.
11. குறித்த குத்தகைதாரர் கேள்வித்தொகையின் 1/3 வைப்புபணத்தினை குறித்த காலப்பகுதிக்குள் செலுத்தி சபைத்தலைவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். குத்தகை மேற்கொள்ள ஆரம்பித்த காலப்பகுதி தொடக்கம் ஒப்பந்த முடிவுத்திகதி வரை குறித்த கடை சீராக பேணப்படுவதுடன் குறித்த கடைக்கான வாடகை சீராக செலுத்தப்படுமிடத்தே 1/3 வைப்பு பணம் ஒப்பந்த முடிவுத்திகதியில் தங்களுக்கு மீளளிக்கப்படும்.
12. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை பிரதேசசபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| குத்தகை விபரம் | காலம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த மாதாந்த வாடகை | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்வி வைப்பு |
|---|---|---|---|---|---|
| தேக்கம்(குஞ்சுக்குளம்) சுற்றுலா மைய உணவு விடுதி | 2026.06.01 -2028.05.31 | 6,600.00 | 6600X 24 = 158,400.00 | 1,000.00 | 3,000.00 |

**தலைவர்,**
**நானாட்டான் பிரதேச சபை.**

**18.05.2026**

(cr.475491)(N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மன்னார் நீர் நிலைகளை ஆக்கிரமிக்கும் சம்புப்புல்

## விவசாயச்செய்கை பாதிப்பு

மன்னார்,மே 18

**மன்னார் மாவட்டத்தில் வாய்க்கால் உள்ளிட்ட நீர்நிலைகளில் சம்புப்புல்லின் பரவல் அதிகரித்துள்ளதால், வயல்களுக்கான நீரோட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது.**

அத்துடன் புல்லின் விதைகள் காற்றில் சஞ்சரிப்பதால், விவசாயிகளின் சுவாசத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று மன்னார் விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதற்குப் பதிலளித்துள்ள மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சகீலா பானு,

மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக நீர் நிலைகளிலும், வாய்க்கால்களிலும் இந்தப் புல் பரவலடைந்துள்ளது. இந்தப் புல் பாய் மற்றும் இதர பின்னல் உற்பத்திகளின் மூலப்பொரு ளாகவும், கூட்டெரு தயாரிப்பதற்கான மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் இந்தப் புல் பரவலடைவதால் வாய்க்கால்களில் நீரோட்டம் குறைவடைவதுடன், நீர்த்தேக்கங்களின் கொள்ளளவும் குறைக்கப்ப டுகின்றது. இந்தப் புல் அடர்த்தியாக வளர்வதால், வேறு தாவரங்கள் அருகில் வளர அனுமதிப்பதில்லை. இதனால் மண்ணின் ஊட்டச்சத்து சுழற்சியிலும் விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே இதன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முகாமைத்துவம் அவசியமானது. அதிக பசளை பாவனையைக் குறைத்து, வயல்களுக்கு பிரித்திடுவதன் மூலம், பசளை நீரில் கழுவுண்டு சேருவதைத் தவிக்கலாம். இதனால் வளர்ச்சி தடைப்படும். சிறிய அளவில் காணப்படும் புற்களை வேருடன் பிடுங்கி விடலாம். கோடை காலங்களில் காய்ந்த நிலையிலுள்ள தாவரங்களை விதைகளுடன் எரிப்பதன் மூலம் விதைப் பரம்பலைக் கட்டுப்படுத்தலாம்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை நிலத்தடியில் உப்புப் படிமங்கள் இருப்பதால், கனரக வாகனங்கள் மூலம் வெட்டிப் பிரட்டுவது உகந்ததல்ல. இந்த முறைகள் பயனளிக்காத போது, பிரதேச விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு சிபாரிசு செய்யப்பட்ட களைகொல்லி இரசாயனத்தை விசிறலாம். இந்தப்புல்லானது ஒரு முறை அகற்றப்பட்டாலும், மீண்டும் வளரக்கூடியது என்பதால் தொடர்ச்சியான கண்காணிப்பும், பாராமரிப்பும் அவசியமாகும்-என்றார். (க-60)

## உயிர்மாய்க்க முயன்றவர் பொலிஸாரால் கைது!

ஹோமாகமப் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், மோட்டார் சைக்கிளில் எரிபொருள் நிரப்ப வந்த நபரொருவர், திடீரென தனது மோட்டார் சைக்கிள் மீதும், தன் மீதும் பெற்றோலை ஊற்றியுள்ளார். எரிபொருள் நிலைய ஊழியர்கள் அவரைக் கட்டுப்படுத்தியதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த ஹோமாகமப் பொலிஸார் அவரைக்கைது செய்தனர். கைதுசெய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (க–இ)

**சாரதி தேவை**

**A-D அனுமதிப்பத்திரம் உள்ள சாரதி தேவை.**

**நீர்வேலி, யாழ்ப்பாணம்.**

தொடர்பு: **0777 890 398**

(CS 31819)A

உ

சிவமயம்

யஜ்ஞோபவீதம் பரமம் பவீத்தரம் ப்ரஜாபதே!

யத்ஸஹஜம் புரஸ்தாத் ஆயுஷ்யமக்ரியம்

ப்ரதிமுஞ்ச சுப்ரம் யஜ்ஜோபவீரம் பவமஸ்து தேஜ:

**சௌள உபநயன பிரமமோபதேச சுபமுகூர்த்தப் பத்திரிகை**

**அன்புடையீர்,**

நிகழும் மங்களகரமான பராபவ வருடம் வைகாசி மாதம் 04 ஆம் நாள் 18.05.2026 திங்கட்கிழமை ரோகினி நட்சத்திரமும் துதியை திதியும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 9.57 - 10.23 மணி வரையுள்ள கடக லக்ன சுபமுகூர்த்த வேளையில்

*ஸ்ரீவத்ஸ்தகோத்திரம்*

பிரம்மஸ்ரீ சி.சிவசரணபவானந்தேஸ்வரசர்மா - பாலநாகேஸ்வரி தம்பதிகளின்

**பௌத்திரனும்**

**ஆத்திரேய கோத்திரம்**

பிரம்மஸ்ரீ மு.பிரபாகரசர்மா உமாராணி தம்பதிகளின்

**தௌகித்திரனும்**

**எம்து புத்திரர்களுமாகிய**

**சிரஞ்சீவி சிவானுஜ சர்மா**

**சிரஞ்சீவி தனுஜ சர்மா**

**ஆகிய இருவருக்கும்**

அருள்மிகு கொழும்புத்துறை இலந்தைக்குளம் பழனியாண்டவர் கோவில், அராலி வட்டியவத்தை ஹரிஹரபுத்திர ஐயனார் பார்வதி, பரமேஸ்வரன் அரியாலை பிரப்பங்குளம் மகாமாரியம்மன் திருவருள் துணையுடனும் பெரியோர்களின் நல்லாசியுடனும் நிச்சயிக்கப்பட்டு அரியாலை பிரப்பங்குளம் மகாமாரியம்மன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

எனவே தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து குமாரர்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**உபநயன தீட்ஷா குரு**

**வைதீக சாகரம் சதம மகோற்ஸவர்**

**சிவஸ்ரீ பாஸ்கரரவிக் குருக்கள்**

**நீராவியடி யாழ்ப்பாணம்**

**இங்ஙனம்**

**தங்கள் நல்வரவை நாடும்**

**சி.ஜெயகாந்தக் குருக்கள்**


(பார்வதி பரமேஸ்வரன் ஆலய பிரதம குரு)

**கமலினி, தம்பதிகள் சுபாஹரி.**

**82/1, மாம்பழம் சந்தி,**
**அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**
**077 232 4991**

(cs.61464) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 12 . 1975

மறைவு 16 . 05 . 2026

### காந்தரூபசிங்கம் கமல்ராஜ்

**(பிறின்ஸ் Hotel கணக்காளர்)**

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வவுனியா தாண்டிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட காந்தரூபசிங்கம் கமல்ராஜ் (பிறின்ஸ் Hotel கணக்காளர்) கடந்த 16.05.2026 சனிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் அமரர் காந்தரூபசிங்கம் மற்றும் பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும், அமரர் கருணாகரன் மற்றும் ரஞ்சினி தம்பதியரின் அன்பு மருமகனும், சித்திராவின் அன்புக் கணவரும், கரிஷா (அபி-மாணவி, வவு/சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு தந்தையும், அமரர் கமல்ஜித் மற்றும் கமல்நாத் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருபா, சுரேஸ், சுதாகர், சுபத்திரா ஆகியோரின் மைத்துனரும், சித்திராதேவி, பிறேமிளா ஆகியோரின் பெறா மகனும், அமரர் பந்துசேனன் மற்றும் தருமசேனன், ஜெயசேனன், கருணதாஸ், சௌந்தரசேனன், சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மருமகனும், பிரணவன், பிருந்தவி, பிரனுஜன், கஜனி, கவின்ஜா, கபிஷா ஆகியோரின் பெரியதந்தையும், மதுஷான், விஜிராசன், வேணுசாகிசன், சர்வீசன், துஹிர்சனா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தாண்டிக்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, உடலம் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**T.P: 0777 922 172**

(CR 47558) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## முள்ளிவாய்க்காலில்....

2009ஆம் ஆண்டு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டு 17 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், ஒவ்வொரு ஆண்டும் முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு, மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு நாள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 12ஆம் திகதி ஆரம்பமான முள்ளிவாய்க்கால் வாரத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நினைவேந்தல் ஊர்திப் பவனிகளும், முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிரலும், பல்வேறு இடங்களில் தினமும் அஞ்சலி நிகழ்வுகளும் நடத்தப்பட்டு வந்தன. முள்ளிவாய்க்கால் நினைவு நாள் நினைவேந்தல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் இன்று முள்ளிவாய்க்காலில் உள்ள நினைவு முற்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முற்பகல் 10.15 மணிக்குக் கொள்கைப் பிரகடனம் வாசிக்கப்பட்டு, 10.29 மணிக்கு மணி ஒலிக்கப்பட்டு, 10.30 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்படும். முற்பகல் 10.31 மணிக்குப் பொதுச்சுடர் ஏற்றலும், சமநேரத்தில் தனிச்சுடர் ஏற்றலும் நடைபெறும். தொடர்ந்து முற்பகல் 10.35 மணி முதல் மலரஞ்சலியும் நடைபெறும்.

நினைவேந்தல் நிகழ்வில் கட்சி, இனம், மதம், பிரதேசம் போன்ற குறுகிய மனப்பான்மைகளைக் கடந்து, ஈழத்து மக்களாக ஒன்றிணைந்து இந்தத் துயர நாளை நினைவுகூர வேண்டும் என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர் அருட்பணி சின்னதுரை லியோ ஆம்ஸ்ட்ரோங் அழைப்புவிடுத்துள்ளார். கொல்லப்பட்ட மக்களுக்காக அஞ்சலி செலுத்துவதுடன், தமிழர்களின் தேசிய நலன்கள் மற்றும் அபிலாஷைகளை வலியுறுத்தும் வகையிலும் இது அமைய வேண்டும். இந்த ஆண்டும் பொதுமக்கள், சிவில் அமைப்புகள் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஒன்றிணைந்து ஒரே குடையின் கீழ் இந்த நிகழ்வில் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வெவ்வேறு பாகங்களிலும் அரசியல் கட்சிகள் சிவில் அமைப்புகளால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கொழும்பில் வெள்ளவத்தை அலெக்ஸ்சான்ரா வீதியின் முடிவுக்கு எதிர்ப்புறத்தில் உள்ள க்டற்கரையில் நினைவேந்தல் நிகழ்வை மாலை 5 மணிக்கு முன்னெடுப்பதற்கும் திட்டமிட்டப்பட்டுள்ளது.

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் லண்டன், கனடா, பிரான்ஸ் உள்ளிட்ட சர்வதேச நாடுகளிலும், தமிழகத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

## சுவிஸால்...

கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டுள்ளமை உடற்கூற்றுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. வீட்டில் இருந்த நகைகள், பணம் என்பன இந்தக் கும்பலால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணத்தில், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாயில் நடந்துள்ளது. சண்டிலிப்பாயைச் சேர்ந்த வல்லிபுரம் சந்திரசேகரம் (வயது-67) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவர் நீண்டகாலமாக சுவிற்ஸர்லாந்தில் வசிக்கின்றார். விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்த அவர், கடந்த இரு மாதங்களால் சண்டிலிப்பாயில் உள்ள தனது வீட்டில் தங்கியிருந்தார்.

சுவிற்ஸர்லாந்தில் உள்ள குடும்பத்தினர் கடந்த 14ஆம் திகதியின் பின்னர் இவரைத் தொடர்புகொள்ள முடியாதிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மானிப்பாய் பொலிஸாருக்கு அது தொடர்பில் அறிவித்திருந்தனர்.

மானிப்பாய் பொலிஸார் அவர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றபோது, வீட்டுக்குள் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. அதையடுத்துப் பொலிஸார் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றபோது, உடலில் வெட்டுக்காயங்களுடன் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. அதையடுத்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்கள் சேதமாக்கப்பட்டிருந்தன. கமரா சேதமாக்கப்பட முன்னர் சேமிக்கப்பட்ட பதிவுகளின்படி கடந்த 14ஆம் திகதி இரவு மூகமூடி அணிந்த இருவர் சமையலறை வழியாக வீட்டுக்குள் நுழைந்தமை பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் கண்டறியப்பட்டது.

வீட்டுக்குள் நுழைந்த முகமூடி அணிந்த நபர்கள், வீட்டில் இருந்த கண்காணிப்புக் கமராக்களைச் சேதமாக்கிய பின்னர், வீட்டிலிருந்தவரைக் கொலை செய்துவிட்டு அங்கிருந்த நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளனர் என்பதும் ஆரம்ப விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. பொலிஸ் மோப்ப நாய்கள் பின்தொடராத வகையில் வீட்டின் பல பகுதிகளிலும் கொள்ளையர்கள் மிளகாய்த் தூளை வீசிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றில் பொலிஸார் அறிக்கையிட்ட நிலையில், மல்லாகம் நீதவான் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பவும் உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் கொல்லப்பட்டவரின் உடலில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் கூரிய ஆயதங்களால் குத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளில் பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. இந்தக் கொடூரச் சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (அ-எ-26)

## சிறீதரன்...

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கட்சிக்குள் எடுக்கப்பட்ட தீர்மானமாக இருந்தாலும் அந்தத் தீர்மானம் உரியமுறையில் அறிவிக்கப்படாவிட்டால் அது திரிவுபடுத்தப்படக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. அதனால் கட்சி உத்தியோகபூர்வமாக எடுத்த தீர்மானத்தை அறிவிப்பதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அரசமைப்புப் பேரவையில் அரசாங்கத்துக்குச் சாதகமாக செயற்பட்டார் என்ற ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அது தொடர்பாக அவருக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தோம். அந்த பதவியிலிருந்து கட்சியைச் சங்கடப்படுத்தாமல், அவரும் சங்கடப்படாமல் பதவி விலக வேண்டும் என்று கட்சியின் அரசியல் குழு கடிதம் அனுப்பியிருந்தது. அதற்கு அவர் இணங்காததால் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து அவர் இறக்கப்பட்டார். இது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இது தொடர்பாக இன்றைய (நேற்றைய) கூட்டத்திலும் பேசப்பட்டு இறுதியில் சுமுகமாக ஒரு தீர்மானம் எட்டப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் இணக்கத்துடன் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம். இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் கட்சியின் பதவி நிலையில் உள்ள மூவர், அதாவது தலைவர், நிர்வாகச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் கொண்ட குழு குற்றச்சாட்டுகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினருடன் கலந்துபேசி ஆராய்ந்து மத்திய செயற்குழுவுக்கு அறிவிப்பார்கள். ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாகப் பேசப்பட்டாலும், ஒரு இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்தப் பொறிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது-என்றார். (அ-எ-110)

## வாகன...

என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராட்டியுள்ளார்.

இது தொடர்பில் சமூக ஊடகங்களில் அறிக்கை ஒன்றைப் பகிர்ந்துள்ள அலி சப்ரி, உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் இந்த நடவடிக்கை அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சர்வதேச ரீதியில் நிலவி வரும் மோதல்கள், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் எதிர்பார்த்ததை விட நீண்ட காலத்துக்குத் தொடரக்கூடும். இதனால் இலங்கை போன்ற இறக்குமதியை அதிகம் நம்பியிருக்கும் சிறிய பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளுக்கு அழுத்தம் அதிகரிக்கும் என்றும் ஆரம்பத்திலிருந்தே எச்சரித்திருந்தேன்.

கடந்த 15ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு இந்த கூடுதல் கட்டண விதிப்பில் இருந்து விலக்கு அளிக்க அரசாங்கம் எடுத்துள்ள முடிவும் பாராட்டத்தக்கது. இது ஒரு "விவேகமான மற்றும் நியாயமான பாதுகாப்பு நடவடிக்கை". இதன் மூலம் இறக்குமதியாளர்கள் பின்னோக்கிய சிக்கல்களிலிருந்தும் தேவையற்ற நிர்வாகச் சுமைகளிலிருந்தும் பாதுகாக்கப்படுவர்.

சர்வதேச மோதல்களால் எரிசக்தி சந்தைகள், வர்த்தக வழிகள், சுற்றுலாத்துறை, முதலீட்டாளர்களின் நம்பிக்கை மற்றும் வெளிநாட்டு நிதியுதவிகள் ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்புகள், இலங்கையின் பொருளாதார மீட்சியை இன்னும் பாதிக்கப்படக்கூடிய ஒன்றாகவே வைத்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## பாதுகாப்புப்...

யிட்ட அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க பாதுகாப்புப் படைகளின் பிரதானியை நியமிக்கும் சட்டத்தை நீக்குவதற்கும், அது தொடர்பான அல்லது அதன் அத்தியாவசிய விடயங்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் இந்தச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவரைவின் மூலம் பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவி நிலை முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ளது. சட்டம் நடைமுறைக்கு வரும் நாள் முதல் பாதுகாப்புப் படைகளின் பிரதானி என்ற பதவி நிலை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பதவியை வகிக்கும் நபர், அவர் சார்ந்த முப்படைகளின் உரிய சேவைப் பிரிவுக்கு மீண்டும் இணைக்கப்படவுள்ளார். இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன் பாதுகாப்புப் படைகளின் பிரதானி அலுவலகத்துக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துகள் அனைத்தும் பாதுகாப்பு விடயதானம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சின் கீழ் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அந்த சட்ட வரைவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## புதிய...

படி, திருத்தப்பட்ட இந்தச் சட்டவரைவு மேலதிக சட்டத்துறை பரிசீலனைகளுக்காக சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அங்குள்ள உத்தியோகபூர்வ பரிசீலனைகள் நிறைவடைந்த பின்னர், இந்த மே மாத இறுதிக்குள் இந்த புதிய சட்ட வரைவு நீதி அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்ஸகுலரத்ன தலைமையிலான 17 பேர் கொண்ட துறைசார் நிபுணர்கள் குழுவாலேயே இந்தச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## ஆளுநர்...

ஒருவர் நியமிக்கப்படும்வரையில், ஆளுநர் பதவியில் நீடிக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில், ஆளுநர் பதவிக்குரிய பொதுத்துறைப் பொறுப்புகள், வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான ஜனாதிபதியின் விசேட தூதுவர் என்ற மேலதிக பொறுப்புகள் மற்றும் எனது குடும்பக் கடமைகள் ஆகியவற்றுக்கு இடையே சமநிலையைப் பேணுவதில் உள்ள சவால்கள் அதிகரித்துள்ளன. அதனாலேயே ஆளுநர் பதவியிலிருந்து விலகுவதற்கான எனது விருப்பத்தை சில காலத்துக்கு முன்பே ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஆளுநர் பதவியில் முறையான மற்றும் சுமுகமான மாற்றத்தை உறுதி செய்யும் பொருட்டு, பொருத்தமான புதிய ஆளுநர் ஒருவர் கண்டறியப்படும் வரை தற்காலிகமாக இந்த பதவியில் நீடிக்குமாறு ஜனாதிபதி என்னிடம் கோரிக்கை விடுத்தார். அதற்கமைய, புதிய ஆளுநர் நியமிக்கப்படும் வரை நான் பதவியில் நீடிப்பேன். அதன் பின்னர், வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான ஜனாதிபதியின் விசேட தூதுவர் என்ற எனது தற்போதைய கௌரவப் பதவியில் தொடர்ந்து பணியாற்றுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஊடகவியலாளர்...

வந்தார். இறுதிச் சடங்குகள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் குறித்த விவரங்கள் குடும்பத்தினரால் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னீர் இறால் வளர்ப்புக்கு ரூ.25 மில்லியன் ஒதுக்கீடு

## தொழில்நுட்பத் திட்டம் அறிமுகம்

**கொழும்பு, மே 18**

**இலங்கையின் உள்நாட்டு நன்னீர் மீன்பிடித்துறையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் நோக்கில், ஜனாதிபதியின் வரவு- செலவுத் திட்டத்தில் 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் நன்னீர் இறால் வளர்ப்பில் தொழில்நுட்பத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதுவரை பின்பற்றப்பட்ட பாரம்பரிய முறைக்கு மாற்றாக, இறால் குஞ்சுகளை நேரடியாக நீர்நிலைகளில் விடுவிக்காமல், அவற்றை நீர்த்தேக்கங்களுக்குள்ளேயே அமைக்கப்பட்டுள்ள கூடுகளில் ஒரு மாதம் வரை வளர்த்து அதன் பின்னரே நீர்நிலைகளுக்குள் விடுவிப்பது இப்புதிய தொழில்நுட்பத்தின் சிறப்பம்சமாகும். இதற்கமைய, நன்னீர் இறால் வளர்க்கப்படும் பிரதான நீர்த்தேக்கங்களை மையப்படுத்தி, ஆராய்ச்சி மட்டத்திலான 25 கூடுகளை நிறுவுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னைய முறையில், ஒரு கிலோ இறால் அறுவடையைப் பெறுவதற்கு சுமார் 300 முதல் 400 வரையான குஞ்சுகளை நீர்நிலைகளில் விட வேண்டியிருந்தது. ஆனால், இந்த புதிய 'கூடு முறை' மூலம் ஒரு மாத கால வளர்ச்சியின் பின்னர் சுமார் 1.5 2 அங்குல நீளம் வரை வளர்ந்த நிலையில் இறால்களை விடுவிப்பதால், 100 குஞ்சுகளைக் கொண்டே ஒரு கிலோ இறால் அறுவடையைப் பெறமுடியும் என எதிர்பார்க்கிறோம்.

இது நன்னீர் இறால் வளர்ப்புத் துறையின் வினைத்திறனை மூன்று மடங்காக அதிகரிக்கும் ஒரு புரட்சிகர மான மாற்றமாகும்.

இப்புதிய தொழில்நுட்பத் தலையீட்டின் மூலம் நன்னீர் மீனவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், நுகர்வோருக்கு அதிகளவிலான நன்னீர் இறால் உற்பத்திகளை வழங்கவும் முடியும் என இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் திருமஞ்சத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை நூற்றுக் கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ம-41-66)

## சதுரங்கப் போட்டிக்கு விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம், மே 18

தியாகதீபம் திலீபன் ஆவணக்காப்பகம் நடத்தும், தியாகதீபம் திலீபன் ஞாபகார்த்த மாபெரும் சதுரங்கச் சுற்றுப்போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 28ஆம் திகதி, திருநெல்வேலி சிவகாமி மஹாலில் இடம்பெறும். இந்தப் போட்டியில் கலந்துகொள்வதற்கு எதிர்வரும் ஜூலை மாதம் 18ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கலாம். 077 299 96 99 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (க)

## விசுவமடு மகாவித்தியாலயத்திலுள்ள பாதுகாப்பற்ற கட்டடங்களை அகற்றுக

### ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, மே 18

விசுவமடு மகாவித்தியாலயத்திலுள்ள பாதுகாப்பற்ற கட்டடங்களை அகற்றி, அதற்குப் பதிலாக புதிய கட்டடங்களை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார். புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:-

விசுவமடு மகாவித்தியாலயத்துக்கு நேரடியாகச் சென்று, பாடசாலைகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளேன். அங்கு 50 வருடங்களுக்கும் மேற்பட்ட பழமையான கட்டடங்கள் உள்ளன. அந்தக் கட்டடங்கள் புதிதாக அமைக்கப்பட வேண்டும். அல்லது உரிய தொழில்நுட்பவியலாளர்களால் பார்வையிடப்பட்டு சீரமைப்பு வேலைகளை முன்னெடுக்க வேண்டும். இந்தப் பழைய கட்டடங்கள் தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படாவிடின், மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையே முழுப்பொறுப்பாகும்- என்றார். (க-246)



## லொறிமோதி தேரர் சாவு

கொழும்பு, மே 18

பேராதனையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த லொறி மோதி தேரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து பேராதனை ரஜவத்தை வீதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. வீதியைக் கடக்க முயன்ற தேரரையே அந்த லொறி மோதித் தள்ளியுள்ளது. படுகாயமடைந்த தேரர் பேராதனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் போவலவத்தைப் பகுதியிலுள்ள ஆச்சிரமம் ஒன்றில் வசித்து வந்த 83 வயதுடைய தேரர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (க-இ)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 18

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும், யாழ்.சித்த வைத்தியபீட குணபாட துறையும் இணைந்து நவக்கிரி சித்த மத்திய வைத்தியசாலை மற்றும் மூலிகைத்தோட்டம் நடத்தும் மலர்களின் மருத்துவம் எனும் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நவக்கிரி சித்த மத்திய மருந்தகத்தில் நடைபெறும். (க)



## புங்குடுதீவு மருத்துவமனைக்கு இரு மருத்துவ உபகரணங்கள்

புங்குடுதீவு உலக மையம் ஏற்பாட்டில் திருமதி நளாயினி அருள்பாலாவின் 50ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அவரது உடன்பிறப்புகளின் நிதியுதவியில், புங்குடுதீவு பிரதேச மருத்துவமனைக்கு, மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்தியாவசிய உபயோகத்துக்கு உடனடியாகத் தேவைப்பட்டிருந்த சக்கரநாற்காலி, நோயாளர் தள்ளுவண்டியாகப் பயன்படுத்தக்கூடிய பரிசோதனைப் படுக்கை என்பன இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. புங்குடுதீவு பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மருத்துவமனை மருத்துவர் எம். பர்ஷாத், நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் மேனாள் செயலாளர் பூராசா அன்பரசி, புங்குடுதீவு பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் உப தலைவர் கருணாகரன் குணாளன் ஆகியோர் உபகரணங்களைக் கையேற்றனர். (க-20-பி)

## தெய்வீக இசையரங்கம்

யாழ்ப்பாணம், மே 18

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மாணவிகளான வேல்மாறன் சாருமதி, வேல்மாறன் சாரங்கி குழுவினரின் தெய்வீக இசையரங்கம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது. ஆச்சிரம முதல்வர் செ.மோகன தாஸ் சுவாமிகள் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. (ம-41-66)



செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media